சார்பு நீதிமன்றம், துறையூர்.
OS.No.99/2022

தேதி:18.01.2024

பெயர் : (வா.சா.1) செந்தில்வடிவு க/பெ: தமிழ்செல்வன்

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1. மாரிமுத்துவிற்கு மாரியாயி, பழனியாண்டி, முத்துசாமி உள்ளதாக சொல்லியுள்ளேன் மாரியாயி, ஆண்டியை தெரியும்எ ன்று சொல்லியிருக்கிறேன். மாரியாயி இறந்தபிறகு அவருக்கு பிறந்த குழந்தை முத்து சாமி, ஆண்டி , கமலம் தெரியாது என்றால் சரிதான். இதில் முத்து சாமி இறந்துவிட்டார் என்றால் சரிதான். முத்துசாமி மனைவி கமலம் இருப்பது தெரியாது. முத்துசாமி கமலத்திற்கு பிறந்தகுழந்தை திருமயில், பழனிசாமி, சரவணன் தெரியுமா என்றால் தெரியாது. திருமயில் இறந்து போய் அவர் மனைவி சூர்யாவிற்கு பிறந்த குழந்தை சங்கரி, மகாலட்சுமி, கிருஷ்ணன் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் முக்கியமான தரப்பினர்களான மாரியாயி வகையறாவான 9 பேரை இந்த வழக்கில் சேர்க்காமல் பாகம் கேட்டுள்ளதால் இந்த வழகக்கு செல்லாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தமிழ்செல்வன் பெயரில் உள்ள வீட்டை என் பெயரில் மாற்றிகொண்டேன் என்றால் சரிதான். மற்ற வாரிசுகளை ஏன் சேர்க்கவில்லை என்று சொல்லமுடியுமா என்றால் மற்றவர்களை எனக்கு தெரியாது. பழனியாண்டி வீட்டைவழக்கில் காட்டாததால் அது பழனியாண்டிக்கு பிரித்த சொத்து அதனால் தான் காட்டவில்லை என்றால் சரியல்ல. அதன் மொத்த பரப்பளவு 3444 சதுரடி கொண்டது என்றால் தெரியாது, அந்த சொத்திற்கு பழனியாண்டி பெயரில் வீட்டு வரி ரசீது உள்ளது என்று சொன்னாலும் தெரியாது.

2. 28.03.1990 ல் பூங்கோதை பெயரில் சர்வேஎண் 262/10, 263/14 ல் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிர்வழக்குரையில் தமிழ்செல்வனுக்கு இறந்த பிறகு பணபலன் 30 லட்சத்திற்கு மேல்வரும் என்று சொன்னார்கள் என்றால் ஆமாம். அந்த 30 லடசத்தில் எனக்கு பாதியும், அருட்செல்விக்கு பாதியும் கிடைக்கத்தக்கது என்றால் இல்லை. நான் வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளேன் என்றும், மாவட்ட நீதிமன்றத்தில் தாக்லை செய்ய வேண்டிய வழக்கை மறைத்து இங்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முத்துசாமி இறந்து 47 வருடங்கள் கழித்து தான் பாகம் கோருகிறேன் என்றால் இல்லை. முத்துசாமிக்கும் பழனியாண்டிக்கும் எவ்வாறு பாகம் பிரிந்தது என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் அசையும் சொத்துக்களை குறித்து நான் வழக்குரையில்

சொல்லவில்லை என்றால் வீட்டில் உள்ளதை நான் வக்கீலிடம் சொன்னேன். அதன் சொத்து மதிப்பு காட்டி நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. என் வழக்கு பகுதி குறைஉடைய வழக்கு என்று சொன்னாலும் சரியல்ல. நான் சொல்லியுள்ள 09.07.2010 மற்றும் 16.08.2010 தேதியிட்ட ஆவணங்களை செல்லாது என பரிகாரம் கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணங்கத்தின் அடிப்படையில் வருவாய் துறை ஆவணங்கள் எல்லாம் அவர் பெயரில் மாறிவிட்டது என்றால்சரியல்ல. மேலும் நான் உரிய தரப்பினர்களை சரியாக சொல்லவில்லை என்றும், சரியான விவரங்களை சொல்லவில்லை என்றும், அனைத்து சொத்துகளையும் சேர்ககவில்லை என்றும் நான் கேட்டுள்ள பாகபிரிவினை பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளதால் நான் கோரிய நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதுஅல்ல என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் எந்தெந்த சொத்துக்களை யார் யார் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/

(ஓம்/–எம்.ஜெய்சங்கர்)
சார்பு நீதிபதி,
துறையூர்.